# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்



வெளியிடுவோர்

காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## இதழின் உள்ளே


*கர்த்தருடைய ஜெபமா* 1
*சிறந்த முன்னோடிகள் தேவை* 7
*ஆண்களை விட பெண்கள் தாழ்ந்தவர்களா* 11
*அறியப்படாத தேவன்* 14
*என்கிருபை உனக்கு போதும்* 18
*இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்* 20
*மரணத்திற்குப்பின் நடப்பதென்ன* 21
*தேவ ஞானம் மனித ஞானம்* 23
*புறங்கூற வேண்டாம்* 25
*வேதாகமம் கூறுகிற ஒன்றுகள்* 27

**THIRUMARAI AASAAN**

Editor :
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 7 JULY 1994 Issue - 7

## ஆசிரியவுரை

# கர்த்தருடைய ஜெபமா?

# சீஷர்களுடைய ஜெபமா?

மத்தேயு எழுதின சுவிசேஷம் 6-ம் அதிகாரம் 9 முதல் 13 வசனங்களில் அடங்கியுள்ள பகுதியை உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான கிறிஸ்தவர்கள் 'கர்த்தருடைய ஜெபம்' என்று சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக் கொண்டுவிட்டனர். சொல்லப் போனால், அப்பகுதியில் நமதாண்டவர் ஜெபிக்கவேயில்லை. மாறாக, தன்னுடைய சீஷர்கள் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுக்கிறார். அவ்வளவே. ஜெபிக்கக் கற்றுக் கொடுப்பது வேறு, ஜெபிப்பது வேறு. இவ்விரண்டிற்கும் இடையில் உள்ள பெரும் வித்தியாசத்தைப் பார்க்க மறுப்பது எப்படி நியாயமாகும்? இந்த ஜெபத்திற்கு ஒரு பெயர் சூட்ட நாம் விரும்பினால் "சீடர்களின் ஜெபம்" என வேண்டுமானால் சொல்லலாம். "கர்த்தருடைய ஜெபம்" என்று ஒன்றை அழைக்க நாம் ஆசைப்பட்டால் யோவான் 17ம் அதிகாரம் இதைவிடப் பொருத்தமானதாக அமையும்!

மேற்சொன்ன பகுதி புகழ்மிக்க மலைப்பிரசங்கத்தின் ஒரு பகுதியாகும். அப்பிரசங்கத்தின் மூலம் அந்நாட்களில் நடைமுறையில் தவறாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த அநேக காரியங்களைக் குறித்துப்பேசி தெளிவுபடுத்தினார். அவர் எடுத்துக்கொண்ட தலைப்புகளில் "ஜெபமும்" ஒன்று. அவரைப் பின்பற்றிய சீடர்கள் முறையாக ஜெபிக்கக் கூட தெரியாமல் இருந்தனர் (லூக் 11 : 1) மாயக்காரரைப் போலும், அஞ்ஞானிகளைப் போலும் ஜெபிக்கக் கூடாதென்று பிரசங்கித்ததோடல்லாமல், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் கற்றுக்கொடுக்கிறார்.

அந்த ஜெபத்தின் மூலமாக வெகு விரைவில் ஸ்தாபிக்கப்பட உள்ள இராஜ்யத்தைக் குறித்து உறுதியாக வெளிப்படுத்துகிறார். ஆம், அவர் யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றதுமுதல், கல்வாரிக்குச் செல்லும் வரை, அவர் பிரசங்கித்ததின் மையம், "இராஜ்யம்" ஸ்தாபிக்கப்படுவதைப் பற்றித் தான். சரி, இந்த சீஷர்களின் ஜெபத்தில் " அடங்கியுள்ள சில உண்மைகளைப் பார்ப்போம்".

## 1. பரமண்டலங்களில் இருக்கிற பரமப் பிதாவே!

'பிதாவே, தகப்பனே', 'அப்பாவே' என்பதெல்லாம் ஒரே பொருளைக் கொடுக்கும் வார்த்தைகள். விரைவில் வரப்போகும் புதிய இராஜ்யத்தில் சீஷர்கள் புதுவிதமான ஒரு உறவை தேவனிடத்தில் பெற்றுக் கொள்ளப் போகிறார்களென முன்னறிவித்துப் போதிக்கிறார். அதாவது அந்த இராஜ்யத்தில் பிதாவாகிய தேவன் தகப்பனாகவும், சீஷர்கள் பிள்ளைகளாகவும் இருந்து ஒரு புதிய உறவை அனுபவிக்கப் போகிறார்கள். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் **யெகோவா** என்றும், **கர்த்தர்** என்றும், **சிருஷ்டிகர்** என்றும் அழைக்கப்பட்டார். ஆனால், இங்கு தான் முதன் முதலாகத்"தகப்பன்" என்று அழைக்கப்படுகிறார்.

சிலாக்கியமான இந்த உறவை புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் அனுபவித்தார்கள் என்பதை, அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் உறுதிப்படுத்துகிறார் "நீங்களெல் லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே ....... ஆபிரகாமின் சந்ததியராயும் வாக்குத் தத்தத்தின் படி சுதந்திரராயும் இருக்கிறீர்கள்" (கலா 3 : 26 -29) பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் ஆபிரகாமின் சந்ததியாராயிருந்து தேவனுடைய பிள்ளைகளென்று சொல்லிக் கொண்டார்கள். ஆனால் வரப்போகும் இராஜ்யத்தில் அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய், அவரை ஏற்றுக் கொள்பவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார் (யோவ 1 : 12)

ஆக 'தகப்பனே' என்பது இராஜ்யத்தின் புத்திரராய் மாறுகிறவர்களுக்கு ஆவிக்குரிய நிலையில் கிடைக்கும் ஒரு புது உறவு. இந்த உறவு முன்னெப்போதும் இராத உறவு.

## 2. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக :

அவருடைய நாமத்தை முற்றிலும் பரிசுத்தமாக ஏற்றுக் கொண்டு அதற்கேற்ற பக்தி, மரியாதை, பயம் இவற்றைக் காட்டவேண்டும். வரப்போகும் இராஜ்யத்தில் அவருடைய பிள்ளைகள் முன் ஒரு போதும் இராத அளவில் ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பவர்களாய் இருப்பார்கள் என்பதும் இதன் பொருள். அவருடைய நாமத்தைப் பரிசுத்த படுத்துவதின் மூலம் தான் நாம் உண்மை ஆவியோடு கூட ஜெபிக்கிறவர்களாய் இருக்க முடியும்.

"பரிசுத்தம்" என்ற இவ்வார்த்தை பூமிக்குரிய வார்த்தை அல்ல. இது தேவனை பூமியிலிருந்து பிரிக்கிறது. தேவனைப் பற்றி பவுலடியார், தீமோத்தேயுவுக்கு எழுதுவதைப் பாருங்கள் "..... அவரே

நித்யாதினந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக". (1 தீமோ 6 : 15, 16)

இவ்வளவு பரிசுத்தம் நிறைந்த தேவனிடம் பாவத்தால் நிறைந்த மனிதர்கள், "நான் தேவனிடம் பேசுகிறேன்" என்று சொல்லி கதைவிடுகின்றனர். அதுவும் எப்படி சாதாரண ஒரு மனிதனிடம் பேசுவது போல. முடியாது. நாம் அவருடைய சமூகத்தில் போய் நிற்கும்பொழுது மிகுந்த மனத்தாழ்மையோடும், நிறைந்த பக்தியோடும் அதிக பயத்தோடும் நிற்கவேண்டும்.

## 3. உம்முடைய இராஜ்யம் வருவதாக!

"இராஜ்யம்" என்பதை பெரும்பாலோர் பரலோகம் (Heaven) என்று எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால் 'இராஜ்யம்' என்பதும் 'சபை' என்பதும் ஒன்றே. மத் 16 : 18, 19 ஆகிய வசனங்களை ஜெபத்துடன் வாசித்தால் இதை விளங்கிக் கொள்வதில் சிரமம் இராது.

யோவான்ஸ்நானகன், இயேசுகிறிஸ்து இவர்களுடைய பிரசங்கத்தின் மையமே "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபத்திருக்கிறது" என்பது தான். அதன் பொருள் இராஜ்யம் விரைவில் ஸ்தாபிக்கப்பட உள்ளது என்பதே. அந்த சபையாகிய இராஜ்யமானது பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று (அப் 2 அதி)

ஆனால் இன்றைக்கும் விபரம் தெரிந்த, நன்கு படித்த கிறிஸ்துவப் பெருமக்களெல்லாம் "இராஜ்யம் வருவதாக" என்று சொல்லி ஜெபிக்கின்றனர். கீழ்வரும் வசனப் பகுதிகளைக் கொஞ்சம் தியானித்துப் பாருங்கள். ஒரு முறை, இயேசுக்கிறிஸ்துவிடம் எப்படியாவது குற்றம்பிடிக்க வேண்டுமென்று படாதபாடுபட்ட பரிசேயர் "தேவனுடைய இராஜ்யம்" எப்பொழுது வரும் என்று கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் அந்த இராஜ்யம் நீங்கள் நினைப்பதைப்போல், எதிர்பார்ப்பதைப் போல் பூமிக்குரிய இராஜ்யம் அல்ல. அது நீங்கள் காண்கிற அளவில் பிரத்தியட்சமாய் வராது என்கிறார். அத்தோடு நில்லாமல் இதோ "தேவனுடைய இராஜ்யம்" "உங்களுக்குள் இருக்கிறதே" என்றார். (லூக் 17 : 20, 21) அவருடைய பதில். அந்த இராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையைப் பற்றிதான் சொல்கிறது. மேலும் இயேசுகிறிஸ்துவின் அடக்கத்தில் பங்கு பெற்றவனாகிய, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பைக் குறித்து - "தேவனுடைய இராஜ்யம்" வரக் காத்திருந்தவன் . . . . " என்று வேதாகமம் கூறுகிறது (லூக் 23 : 50, 51)

இன்னும் சந்தேகமெனில், மாற் 9 : 1-ஐ வாசியுங்கள் "அன்றியும் அவர் அவர்களை நோக்கி இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ஒரு வேளை இயேசுக் கிறிஸ்துவால் இவ்வளவு திட்டமாய் சொல்லப்பட்ட வேதவாக்கியம் இன்னும் நிறைவேறவில்லை யென்றால், இன்றைக்கும் உலகத்தில் 2,000 வயதான மனிதர்கள்

வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். மிஞ்சிப் போனால் 150 வயதுக்கு மேலாக உலகின் எந்த மூலையிலும் மனிதர் உயிருடன் இல்லை. இனி என்ன ஆதாரம் வேண்டும்?

மத் 9 : 1ல் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காண்பீர்களென்று சொல்கிறார். மறுபடியும் இயேசுக் கிறிஸ்து பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள் . . ." என்று சொல்கிறார் (அப் 1 : 8) அப்போஸ்தலர் 2 : 1 - 4ல் பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடும் பெலத்தோடும் இறங்கினதை நாம் காணமுடியும். அதன்பொருள் நமதாண்டவர் வாக்குக் கொடுத்ததைப் போலவே, பெந்தெகொஸ்தே நாளில் இராஜ்யமாகிய சபையானது ஸ்தாபிக்கப்பட்டாயிற்று.

இன்னும் சந்தேகம் தொடருமானால் பிரசித்தி பெற்ற அப்போஸ்தலன் பவுல் சொல்வதற்காகிலும் செவி கொடுங்கள் "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, **தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற,** பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" என்கிறார் கொலொ 1 : 13 கொலொசெ பட்டனத்து கிறிஸ்தவர்கள் அவருடைய இராஜ்யத்துக்குள் இருப்பதாகச் சொல்கிறார். இராஜ்யமானது இன்னும் வரப்போகும் ஒன்றாக இருக்குமானால், அந்த கொலோசே பட்டணத்தார் எப்படி அந்த இராஜ்யத்துக்குள் இருக்க முடியும்?

இனியும் உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபிப்பது தேவனை உண்மையாக நேசிப்பவர்கள் செய்யக் கூடிய செயலாக இருக்க முடியுமா? ஒருவேளை சபையாகிய இராஜ்யமானது. உலகெங்கும் பரவட்டும் என்று வேண்டுமானால் ஜெபிக்கலாம். அதில் தவறேதுமில்லை.

## 4. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக

பரலோகத்தில் பிதாவின் சித்தமானது தூதர்களுக்கு மத்தியில் எப்படி பரிபூரணமான கீழ்ப்படிதலோடு நிறைவேற்றப் படுகிறதோ அதைப் போல பூமியிலும் அவருடைய சித்தமானது அப்படியே நிறைவேற ஜெபிக்க வேண்டும். அப்படி ஜெபிப்பதின் மூலம், சீஷர்கள் அவருடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்கவும், மற்றவர்களுக்கு அவருடைய சித்தத்தைக் குறித்து போதித்து, உற்சாகப்படுத்தவும் முடியும். தேவனுடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்பதன் பொருள். பூமியிலே அவருடைய இராஜ்யமானது விரிவடையவும், எல்லோரும் அந்த இராஜ்யத்தின் உண்மையுள்ள பிரஜைகளாக கொண்டுவரப் படவும் வேண்டுமென்பதே.

## 5. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்

இதன் பொருள், அன்று, அற்புதத்தின் மூலம் மன்னாவை வரவழைத்துக் கொடுத்ததுபோல நமக்கு ஆகாரம் கிடைக்க வேண்டுமென்பதல்ல. மாறாக, மனிதனின் தேவைகளைச் சந்திக்கும் இயற்கைச் சூழல் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பதுதான். அது மாத்திரமல்ல இந்த பூமியில் வாழ்வதற்கு தேவையான எல்லாவற்றையும், தேவனிடம் ஜெபித்து சீஷர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள். சரீரப் பிரகாரமான தேவைகளுக்கு மாத்திரமல்ல ஆவிக்குரிய ஆகாரத்திற்கும் நாம் அவரையே சார்ந்திருக்க வேண்டுமென்பதும் இதன் இன்னொரு பொருளாகும்.

## 6. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்

புதிய இராஜ்யத்தில் சீஷர்கள் இன்னும் பாவிகளாகவும், பாவமன்னிப்புக்காக தேவனைச் சார்ந்திருக்கிறவர்களாகவே இருப்பார்கள். சுவிசேஷத்திற்கு கீழ்படியும் பொழுது பழைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம். ஆனால் பாவமே இல்லாத நிலையை ஒருபோதும் அடைவதில்லை அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு நிருபம் எழுதும்போது, அங்குள்ள கிறிஸ்துவர்களை "**பரிசுத்தவான்களென்று**" அழைக்கிறார். (1 கொரி 1 : 2) இருப்பினும் அதே நிருபத்தில் அவர்களின் அநேக தவறுகளை கண்டிக்கிறார். ஆனால் அவர்களின் பாவ நிலையைக் கண்டித்து, கடிதம் எழுத ஆரம்பிக்கும் பொழுதோ "பரிசுத்தவான்கள்" என்கிறார். 1 யோவான் 1 : 7 -ம் வசனம் சொல்வதை கவனியுங்கள் "அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்". பாவமானது தொடர்ந்து கழுவப்படுதலைக் குறித்துத் தான் இவ்வசனம் மூல பாஷையில் பேசுகிறது.

சரி, நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி நாம் தேவனிடம் கேட்க நமக்கு ஒரு நிபந்தனை இந்த 'சீஷர்களின் ஜெபத்தில்" கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் பாவங்களை நாம் மன்னித்தால் தான், தேவன் அவருக்கு விரோதமான நம்முடைய பாவங்களை மன்னிப்பார். நாம் மன்னிக்காத பட்சத்தில் நமக்கு மன்னிப்பு இல்லை.

## 7. எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்.

இது தேவனிடம் ஏறெடுக்கும் ஒரு மன்றாட்டு. அவரால்தான் நம்மைப் பாதுகாக்க முடியும் என்று முற்றிலுமாக நம்பி விடுக்கும் ஒரு விண்ணப்பம். எங்களுக்கு சோதனையே வேண்டாமென்பது இதன் பொருளல்ல. எங்களுடைய தாங்கும் சக்திக்கு மேலாக

சோதிக்கவேண்டாம் என்பதுதான். நாம் தீமை செய்யும்படி தேவன் நம்மை ஒருபோதும் சோதிப்பதில்லை. சரீரப்பிரகாகரமாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் தீமையினின்று இரட்சித்துக் கொள்ளும் என்பது மட்டும் இந்த மன்றாட்டின் நோக்காமல்ல. அதற்கும் மேலாக சோதனைகளுக்கும் தீமைகளுக்கும் காரணமாயிருக்கிற சாத்தானுக்கு எங்களை விடுவியும் என்பதும் தான்.

அருமையானவரே! கர்த்தருடைய ஜெபம் என்று தவறாக அழைக்கப்படும் "சீஷர்களின் ஜெபத்தை" குறித்துப் பார்த்தோம். என்ன நோக்கத்தோடு இயேசு இதை சீஷர்களுக்கு கற்பித்தார் என்றும், இதன் மூலம் என்ன பாடங்களை நாம் கற்றுக்கொள்ள விரும்புகிறார் என்றும் பார்த்தோம். போதிக்கப்படுவதின் நோக்கம் கற்றுக் கொள்வதற்குத்தான். கற்றுக் கொள்வதின் நோக்கம் கீழ்படிவதற்கு. நாம் அதற்கு தயாரா? இப்பூமியில் வாழ்ந்து மறைந்த, இன்னும் வாழ்கின்ற மெஜாரிட்டி கிறிஸ்துவ சமுதாயத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது என்ன தெரியுமா? பரிசுத்த வேதாகாமத்தில் சுத்தமாக சொல்லப்படாதவற்றை இருப்பதாக நினைத்து பின்பற்றுவதும், மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை பிடிவாதமாக ஏற்றுக்கொள்ள மறுப்பதும் தான்"

வாசகரே! தவறு செய்யும் பெருங்கூட்டத்தில் நீங்களும் ஒருவராக இருக்கப் போகிறீர்களா? அல்லது உண்மையை ஏற்றுக்கொண்டு தனிமனிதராக இருந்தாலும், தேவனுக்குப் பிரியமாய் ஜீவிக்கப் போகிறீர்களா? சிந்தியுங்கள்!

**EZS. *ராஜநாயகம்.***

## "சிறியவை ஆனால் ஞானமுள்ளவை"

அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடை காலத்திலே தங்கள் ஆகாரத்தை சம்பாதிக்கிற எறும்பும்.

சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டிவைக்கும் குழிமுசல்களும்.

ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும்,

தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரண்மனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே.

**நீதி : 30 : 25 - 28**

# சிறந்த முன்னோடிகள் தேவை

ஒரு குடும்பம், பள்ளி, வியாபாரம் கடை அல்லது ஒரு நாடு ஆகியவை நன்கு இயங்க வேண்டுமானால் ஒரு தலைவர் தேவை. அது போல் சபைக்கும் கூட முன்னோடிகள் தேவை. ஏராளமான மக்கள் வீதிகளிலும், தெருக்களிலும் எந்த ஒரு நோக்கமில்லாமல் சுற்றி அலைந்து திரிவர். அவர்களையெல்லாம் ஒரு அணியில் திரட்டி ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்து விட்டால் நல்லதுக்கும் பயன்படுவார்கள்; கெட்டதுக்கும் பயன்படுவார்கள். அது தலைமை ஏற்பவருடைய மனநிலையைப் பொருத்தது.

சபையைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவே தலை (கொலோ 1:18) உலகில் பல்வேறு பாகங்களில் பிராந்திய சபைகள் பரவிக்கிடக்கிறபடியால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் முன்னோடிகள் தேவை. பிராந்திய சபைகளிலும் கூட கிறிஸ்துவே ஆவிக்குரிய தலை, அவருடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தின் மூலமாக அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் வழி நடத்தவும் செய்கிறார். ஆனால் அன்றாடப் பணிகளை மேற்பார்ப்பதற்கு மனித முன்னோடிகளும் தேவைப்படுகின்றனரே! அதற்கு சில மனிதர்கள் உருவாக வேண்டும் அல்லது சபை உருவாக்க வேண்டும்.

ஆதி நாட்களிலே அப்போஸ்தலருக்கு "நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற கட்டளையோடு (மாற்கு 16:15,16) குணப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களில் உறுதியாகத் தரித்திருந்தார்கள் என்றும் பார்கிறோம். ஆயினும் அப்போஸ்தலருக்குச் சொல்லப்பட்ட அனைத்துப் பணிகளையும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. அவர்கள் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுக்கு உதவியாக சில மனிதர்கள் மேல் கை வைத்து சில அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தையும் பகிர்ந்தளிக்க கர்த்தர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அதன் மூலமாக குழந்தைப் பருவத்தில் இருந்த சபை தேவனுடைய உண்மையான வெளிப்பாட்டின் வழியாய் வேரூன்றி தழைத்து வளர முடிந்தது.

ஊழியம். வளர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் சபைகள் நிர்மாணிக்கப்பட்ட பொழுது அவைகளைக் கண்காணிக்கவும் நடத்தவும் மூப்பர்களும் அவர்களுக்கு உதவிக்காரர்களும் தேவைப்பட்டார்கள். (1தீமோ 3 : தீத்து 1) ஒரு ஊழியரோ அல்லது உள்ளூர் பிரமுகர் ஒருவரோ சர்வாதிகாரி போல் நடந்து கொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட தகுதி

வாய்ந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் உருவாகும் வரை சபையின் காரியங்களை மேற்பார்ப்பதற்கும், பிரசங்கம், கர்த்தருடைய பந்தி, சபையின் பொருளாதாரக் காரியங்களை கவனிப்பதற்கும் சிலரை நியமிக்க வேண்டியதாயிருந்தது.

ஆரம்ப நாட்களில் அப்போஸ்தலர்கள் சில குறிப்பிட்ட மனிதர்களின் மேல் கை வைத்ததால் சிலர் அற்புத அடையாளங்களைச் செய்யும் ஆற்றல் பெற்று அவர்கள் சபையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் அநேகமாக மூப்பர்களுடைய ஸ்தானத்தில் பணியாற்றினார்கள். இவ்விதமான பரிசுத்த ஆவியின் சிறப்பு வரங்களின் மூலமாக அவர்களுடைய வேத அறிவு, ஞானம், விசுவாசம் முன் மாதிரியான வாழ்க்கை என்று பல்வகையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். இவைகள் எல்லாம் இருந்தாலும் அவர்கள் ஒரே மனைவியையுடையவர்களாகவும் விசுவாசிக்கிற பிள்ளைகள் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற நியதியையும் பின்பற்றினார்கள். பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம் அவர்களுக்குத் துணை நின்றதால் குறுகிய காலத்தில் அவர்கள் மூப்பர்களுடைய தகுதியடைந்தார்கள். சபையும் பலுகிப் பெருகிற்று.

அன்றைக்கு அப்போஸ்தலராக அழைக்கப்பட்டவர்கள் யாரும் இன்றைக்கு நம்மிடையே உயிரோடில்லை. பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்களோ, அப்போஸ்தலர்கள் கை வைத்ததினால் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களோ கிடையாது. ஆகையால் மூப்பர்களுக்குரிய தகுதிகளை விரைந்து பெற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்புகள் குறைவு. மூப்பர்களுக்குள்ள தகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு காலமும், பயிற்சியும் தேவைப்படுகிறது.

மூப்பர்களைக் கொண்ட சபைகள் இருப்பது விரும்பத்தக்கது. ஏனெனில் வேதாகமம் ஒரு சபை பூரணமடைவதற்கு மூப்பர்களும் உதவிக்காரர்களும் தேவை என்று குறிப்பிடுகிறது. தகுதியில்லாத மக்களை பேருக்காக மூப்பர்களாக ஏற்படுத்தி விடக்கூடாது. அதற்குரிய உண்மையான தகுதிகளையுடையவர்கள் இரண்டு மூன்று பேராவது உருவாகும் வரை சபைக் காரியங்களைக் கவனிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது நல்லது. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களுக்கு இன்னின்ன தகுதிகள் வேண்டும் என்று குறித்திருப்பது விளையாட்டுக்கல்ல, அதற்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு. ஆகவே மாற்று ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்பதை நிரந்தரமாக்கி விடாமல் விரைவில் அத்தகைய தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் முயல வேண்டும்.

1 தீமோ 3ஆம் அதிகாரத்திலும் தீத்து 1-ம் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளில் பெரும்பாலனவைகளை (ஒரே மனைவியையுடைய கணவன் விசுவாசமுள்ள குழந்தைகள், போதிக்கும் ஆர்வம் நூதன சீஷனாயிராமை நீங்கலாக) அடைய ஒவ்வொரு கிறிஸ்தவனும் (ஆண்களும், பெண்களும்) முயல வேண்டும். காலம்

செல்லச் செல்ல இதர தகுதிகளையும் அடைய முடியும். பெண்களும் கூட ஒரே மனைவியையுடைய கணவன் என்ற காரியம், ஆண்களும் அடங்கியுள்ள கூட்டத்தில் பிரசங்கித்தல் ஆகியவை தவிர மற்ற காரியங்களில் தேர்ச்சி பெறலாமே! வேத வசனங்களில் தேர்ச்சியடைந்துள்ள பெண்கள் சகோதரிகள் மற்றும் சிறு பிள்ளைகள் அடங்கிய கூட்டத்தில் போதிக்கலாம்.

மூப்பர்களாகும் தகுதியை பெண்களுக்கு வேதாகமம் விலக்கி வைத்திருக்கிற காரணத்தை அறிய உங்களுக்கு ஒரு வேளை ஆவல் இருக்கும் பெண்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுகிறார் என்று சொல்லலாமா? அல்லது பெண்கள் ஆண்களைப் போல முக்கியமானவர்கள் அல்ல என்பதாலா? அப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது. வேதாகமத்தை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் ஆண்களுக்கும் பெண்களுக்கும், வித்தியாசமான பணிகளை ஒதுக்கியிருக்கிறார் என்பது தெரியவரும். அப்படி அவர் வரையறுத்து வைத்திருப்பதற்கு ஒரு நோக்கம் உண்டு. நாம் எல்லோரும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். கர்த்தர் சர்வ ஞானமுள்ளவர். அவருடைய காரியங்களைச் சந்தேகிப்பதோ கேள்வி கேட்பதோ தகாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிகளைச் செவ்வையாய் செய்வது தான். அவ்வாறு நாம் நம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது அவருடைய சித்தம் நிறைவேறும். நாம் ஒவ்வொரு வரும் நமக்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

பிராந்திய சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்கள் எல்லாருமே மூப்பர்களாகும் தகுதியை அடைய முயல வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் அப்படி செய்வது ஒரு நல்ல வேளையை விரும்புவதாகப் பொருள். நீங்கள் அப்படிப்பட்ட நல்ல வேளையை விரும்பாமற் போனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஒரு நாளும் சம்மதிக்கக் கூடாது. ஏனெனில் உண்மையாகவே அது ஒரு பெரிய வேலை; மகத்தான பொறுப்புள்ளது. மனிதனால் மெச்சிக் கொள்ளப்படுவதற்கு யாரும் மூப்பராகக் கூடாது. ஆனால் அந்தப் பணிக்கு வர விரும்புகிறவர்கள் சபையின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டும், சேவை செய்ய வேண்டும் தன்னுடைய நேரத்தை சபை வேலைக்கு அர்ப்பணிக்க வேண்டும், மற்றவர்களை நேசிக்க வேண்டும், மக்களோடு இணைந்து பாடுபட வேண்டும். ஆன்மாக்களை நேசிக்க வேண்டும். அவர்களுடைய இரட்சிப்புக்காகப் பாடுபட வேண்டும்.

மூப்பர்கள் பிராந்திய சபைக்கு முன்னோடியாகக் இருக்க வேண்டும் அவர்கள் மந்தைகளைக். கண்காணிக்க வேண்டும். உறுப்பினர்களை ஆவியில் வளர உணவூட்டவேண்டும். அவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். பலவீனர்களைத் தாங்க வேண்டும். சத்தியம் போதிக்கப்

படவேண்டும். கள்ள போதங்களைத் தோலுரித்துக் காட்டவேண்டும். தேவன் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும். இம்மாதிரியான தலைமையினால் சபை வலுவடையும் வளர்ச்சி அடையும், முன்னேறும்.

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள் இருப்பது நல்லது. இம்மாதிரியான தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு உலகெங்கிலும் பயிற்சிகள் தரப்பட வேண்டும். இதுதான் இங்கேயும் சரி வேறெங்கிலும் சரி சபை வளர்ச்சிக்கு தேவனுடைய ஆலோசனை, இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டால் மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட எந்த முறையைக் காட்டிலும் சிறந்த பலன் கிடைக்கும். கிறிஸ்துவின் சபை ஓங்கி வளரும்.

**J.C. சோட்**

## "கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்கள்"

1. மேட்டிமையான கண்கள்
2. பொய்யைப் பேசும் நாவு
3. குற்றமற்றவர்களின் இரத்தம் சிந்துங் கை.
4. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்
5. தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால்
6. அபத்தம் பேசும் பொய்சாட்சி.
7. சகோதரர்களுக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்

**நீதி : 6 : 16 -19**

## பெண்கள் பகுதி

### ஆண்களை விட பெண்கள் தாழ்ந்தவர்களா?

ஆண்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்களா? இறைவனுடைய படைப்பில் பெண்கள் இரண்டாம் தர மக்களா? பலர் வாய் திறந்து 'ஆம்' என்று சொல்லத் துணியார்கள். பெண்களும் கூட 'ஆம்' என்று சொல்லுவதற்கு தயங்குவார்கள் ஆனால் அவர்களை அறியாமலே ஆம்.. என்று ஒத்துக்கொள்வார்கள்.

பின்னே ஏன் பெண்களை அதிகார பீடத்தில் அமர்த்தினால் அவர்கள் கடுமையாகவும் கறாராகவும் நடந்து கொள்கிறார்கள்? ஒருவேளை காலமெல்லாம் தான் மற்றவர்களுடைய அதிகாரத்துக்கு அடிபணிந்தே பழகிவிட்ட படியால் இப்பொழுது வாய்ப்புக் கிட்டிய பொழுது அதைப் பூரணமாய் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்களா? ஒரு பெண் ஒரு கடையை நடத்தும் வாய்ப்புப் பெற்றால் அவள் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்கிறாள், உலகுக்கும் தன் கணவனுக்கும் 'நான் ஒன்றும் உங்களை விட மட்டமில்லை'' என்று காட்டிக் கொள்ளும் ஆர்வத்தினாலா?

ஆனால் தாய்க்குலமே! நீங்கள் உங்களுடைய தகுதியை நிருபிப்பதற்கு ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு கடினமாகவும் சமரச முயற்சிகளை நிராகரித்து இரக்கமற்றவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டியதில்லை. ஆணும், பெண்ணும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொள்ள வேண்டும் என்று தேவன் அவர்களை சிருஷ்டிக்கவில்லை. அவர்கள் ஒரு ஜோடியாக இணைந்து ஒருவரோடொருவர் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டுமென்றே அவர் விருப்பமும் நோக்கமுமாகும்.

நேற்றைய தினம் ஒரு பீங்கான் தட்டைத் தவறிக் கீழே போட்டு விட்டேன். தட்டு இரண்டாக உடைந்து அதனுடைய விளிம்புகள் ஏற்றியும் தாழ்த்தியுமாக இருந்தது. அவைகளை மெதுவாக எடுத்து ஒன்றோடொன்று பொருந்தும்படி இணைத்தேன். என்ன ஆச்சரியம்! ஏற்றியும் தாழ்த்தியுமாக இருந்த அதன் ஓரங்கள் சீராகப் பொருந்தி முன்பு இருந்தது போலவே முழுமையாகக் காணப்பட்டது. அதுபோல ஒரு ஆணாவது ஒரு பெண்ணாவது நான் உடைத்துப் போட்ட பீங்கான் தட்டின் ஒரு பகுதியை போலத்தான் இருக்கிறார்கள் தேவன் ஒரு ஆணையும் பெண்ணையும் படைக்கும் போது அவர்கள் இருவரும் சேர்ந்து முழுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் படைத்திருக்கிறார், போட்டி போட்டுக் கொள்வதற்காக அல்ல.

ஆணுடைய சரீரமும் பெண்ணினுடைய சரீரமும் வித்தியாசமானது, அதனால், ஒன்று மற்றதை விடத் தாழ்ந்தது என்று பொருளில்லை. அவர்கள் எந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டார்களோ, அந்த நோக்கத்தின் தேவைக்கேற்பவே படைக்கப்பட்டிருக்கிறார்கள். இயற்கையாகவே ஆண் பெண்ணைவிட பல சாலியாக இருக்கிறான். ஏனெனில் அவர் குடும்பத்தின் தேவைகளுக்காகச் சம்பாதிப்பவனாகவும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியவனாகவும் இருக்கிறான் ஏன்? ஒரு பெண் ஓட்டப்பந்தயத்தில் ஆணுக்குச் சமமாக ஓடமுடியவில்லை? ஏனெனில் அவளுடைய இடுப்பு எலும்புகள் ஆண்களுடையதைப் போல அல்லாமல் குழந்தைப் பேற்றுக்குத் தேவையானபடி படைத்தவரால் உருவமைக்கப் பட்டிருப்பதால் தான்.

ஏன், . ஒரு ஆணும் பெண்ணும் உணர்வுகளில் ஒரே மாதிரி இல்லை? ஆண் குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியவனாகையால் வெளியே செல்லவும் பலவிதமான வேலைகளைச் செய்யவும் பல தரப்பட்டவர்களைச் சந்திக்கிறவனாயும் இருக்கிறான். ஆகவே அவன் நிதானமாகவும் பிரச்சனைகளுக்குத் தக்கவாறு தன்னை சரி செய்து கொள்ளவும் வேண்டியிருக்கிறது. அதே போல் ஒரு பெண்ணின் கடமைகளாகிய குழந்தைகளைப்பெற்று பேணி வளர்த்து, கணவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பொறுமை, அன்பு, சகிப்புத் தன்மை ஆகியவைகளையுடையவளாக இருக்கிறாள்.

வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளையெல்லாம் உற்றுக்கவனித்து கணவன், பிள்ளைகள் ஆகியோரிடையே அன்பை பெருக்கவும் சமாதானத்தை நிலை நாட்டவும் வேண்டியது பெண்ணின் பொறுப்பு பெண்கள் சரீரத்தில் பலவீனமானவர்களாகவும் ஆண்களைக் காட்டிலும் மென்மையானவர்களாகவும் இருந்தாலும் அவள் உற்சாகத்திலும் குணத்திலும், பலவீனமுள்ளவள் அல்ல. ஒரு சமயம் கணவன் சோர்ந்துபோய் வாழ்க்கையில் பிடிப்பு இல்லாமல் நடந்து கொண்டால் உடனே மனைவி அவனை உற்சாகப் படுத்தி ஆறுதல் கூறி எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொடுத்து ஊக்குவிக்கிறாள். இப்படி ஒரு வருக்கொருவர் தேவன் விரும்பியபடியே உற்சாகப்படுத்திக் கொள்கின்றார்கள்.

ஆன்மீக விஷயங்களில் பெண்களின் பங்கு இன்னும் சிறப்பானது. பெண்ணுக்கு வேதத்தை வாசிக்கவும் தியானிக்கவும், ஜெபிக்கவும் அதிக நேரம் கிடைக்கிறது. குழந்தைகளோடு அதிக நேரத்தை கழிக்கிறபடியால், அவர்களுக்கு நல்ல விஷயங்களைக் கற்றுக் கொடுக்க முடியும். ஆன்மீக காரியங்களில் கணவனுக்கு உற்சாகம் கொடுக்க முடியும். இப்படிச் செய்வதின் மூலமாக ஒரு கிறிஸ்தவ மனைவி முழுக் குடும்பத்தையும் தேவனுடைய ஆசீர்வாதத்துக்குள் கொண்டு வர முடியும்.

ஆகவே, ஒரு பெண் ஒரு ஆணுக்கு எந்த விதத்திலும்

தாழ்ந்தவள் கிடையாது. அவர்கள் இருவரும் இணைந்து பாடுபட்டு தேவன் அவர்களைப் படைத்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு முயல வேண்டும். இப்படி ஞானமாய் ஆணையும் பெண்ணையும் படைத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**ரேச்சல் ராஜநாயகம்**

**பெட்டிபர்ட்டன் சோட்**

# நீதிமான் யார்?

**(எசே 18 : 5 - 9)**

1. நியாயத்தையும் நீதியையும் செய்து
2. மலைகளின் மேல் சாப்பிடாமலும்
3. இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும்
4. தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்
5. தூர ஸ்திரீயோடே சேராமலும்
6. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலும்
7. கடன் வாங்கினவனுக்கு அடமானத்தை திருப்பிக் கொடுத்து
8. தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு
9. வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து
10. வட்டிக்குக் கொடாமலும்
11. பொலிசை வாங்காமலும்
12. அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி
13. மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து
14. கர்த்தருடைய கட்டளையின்படி நடந்து, உண்மையாயிருப்பவனே

## அறியப்படாத தேவன்

உலகம் இருப்பதை யாரும் மறுக்க இயலாது; ஆனால் அது எங்கிருந்து வந்தது?"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி 1 : 1) அடுத்து கேட்கப்படும் கேள்வி இவ்வாறாக இருக்கக் கூடும். "எந்த தேவன்?" ஒரு தேவன் இவ்வுலகை உண்டாக்கினாரா? அல்லது நிறைய தேவர்கள் இணைந்து உண்டாக்கினரா?

உலகத்தை உண்டாக்கிய தேவனைப் பற்றி ஒரு அதிசயமான விவாதத்தை அப்போஸ்தலர் 17ம் அதிகாரத்தில் நாம் காணமுடிகிறது. உலக சரித்திரத்திலேயே அதிக விக்கிரகங்களை வணங்கி வந்த நகரங்களில் ஒன்றான அத்தேனே பட்டணத்தைச் சார்ந்த புறமத தத்துவ ஞானிகளின் கும்பல் ஒன்றுடன் பவுல் பேசிக் கொண்டிருந்தார். அந்நகரம் முற்றிலுமாக விக்கிரகங்களால் நிறைந்து காணப்பட்டது. (அப். 17:16) அத்தேனே பட்டணத்தில் ஒரு மனிதனைக் கண்டுபிடிப்பதைவிட ஒரு கடவுளைக் காணுவது எளிதாக இருந்தது என ஒரு ரோம ஆதிவாசி கூறினான். இந்த சரித்திரப் புகழ் வாய்ந்த நகரத்தின் தெருக்களிலே ஒருவன் நடந்து சென்றால், வித்தியாசப்பட்ட பல 'தேவர்களின்' நினைவாக நிறுவப்பட்டிருந்த விக்கிரகங்களின் பார்வையில் படாமல் தப்பிச் செல்லுவது கடினம். என்ற போதிலும் 'ஏதாவது ஒரு தேவனை நாம் மறந்து போயிருக்க வாய்ப்புண்டு' என்று அந்நகர மக்கள் கருதி, மறந்து போயிருக்கக்கூடிய அந்த தேவனின் மகிமைக்காகக்கூட ஒரு மேடையை அமைத்தனர்!

அந்நகரத்தின் தெருக்களில் நடந்து சென்று கொண்டிருந்த பவுல், "அறியப்படாத தேவன்" பேரில் அமைக்கப்பட்டிருந்த மேடையைக் கண்டான். இந்த மறந்துபோன தேவனைப் பற்றியே பவுல் அவர்களுடன் விவாதிக்க விரும்பினான்.

" (22) அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவே நின்று அத்தனரே எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். (23) எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். (24) உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. (25) எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை

கொள்ளுகிறதுமில்லை. (26) மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். (27) கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மை தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. (28) ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். (29) நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷனுடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது. (30) அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதே மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிருக்கிறார். (31) மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, (இயேசு கிறிஸ்து) பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார். (32) மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர் நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம் என்றார்கள். (33) இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப்போய்விட்டான். (34) சிலர் அவனைப் பற்றிக் கொண்டு (அவனோடு தங்கினார்) விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியோனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள். (அப். 17 : 22 -34) உண்மையும் ஜீவனுமுள்ள தேவன் ஒரு மேடையில் மட்டும் தங்கி வசிப்பதில்லை. அல்லது மனிதன் உண்டாக்கிய ஆலயத்தில் மட்டும் வாசம் செய்வதில்லை. தேவன் எல்லாவற்றையும் படைத்தார், எங்கும் ஜீவித்திருக்கிறார். "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர். நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும். உமது வலது கரம் என்னைப் பிடிக்கும். "(சங் 139 : 7 -10).

உலகத்தையும் மனிதனையும் தேவன் இவ்வாறு ஏன் படைத்தார் என வியப்புடன் எப்போதாகிலும் சிந்தித்ததுண்டா? ஏன் இப்படி அவர் படைத்தார் என்றால், "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" (அப். : 27 -28) உண்மையான ஒரே தேவனுக்கு ஊழியஞ் செய்யவே நாம் இவ்வுலகில் இருக்கிறோம். அதற்குக் குறைவான எதையும் தேவன் விரும்புவதில்லை, பிற'தேவர்களை' நாம் ஆராதித்தால் தேவனை கோபப்படுத்துகிறோம். ஏனெனில், அந்த'தேவர்கள்' நமக்காக எதையும் செய்யவில்லை; செய்யும் சக்தியும் அவைகளுக்கு இல்லை. மனிதனை உண்டாக்குவதற்குப் பதிலாக, மனிதனால் உண்டாக்கப்படுவதால் விக்கிரகங்கள் சக்தியற்றவை என ஏசாயா கூறுகிறார். வாழ்க்கை முழுவதும் மனிதனை சுமப்பதற்குப் பதிலாக, மனிதன் விக்கிரகங்களை சுமக்க வேண்டும். (ஏசாயா 44 : 12 - 17; 46 : 3.7) மனிதன் தேவனுடைய சந்ததி என அத்தேனே பட்டணத்தார் கூட ஒப்புக் கொண்டுள்ளனர். (அப். 17 : 28) இது உண்மையாக இருக்கும் போது, பொன், கல், மரம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட ஒரு தேவனை நாம் வணங்கினால் நம் நிலை எதுவாயிருக்கும்? தேவனை இழிவுபடுத்துவதின் மூலம் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்ளுகிறோம்.

நமது வாழ்வில், தேவனை அவருக்கு உரிய இடத்தில் உயர்த்தி வைக்க வேண்டும். அவரே மிக உன்னதமானவர். வேறு தேவன் நமக்கில்லை; தேவனை விசுவாசியாமல் தவறிப்போனால் எந்த மன்னிப்பும் இல்லை. "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகம் உண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை."(ரோமர் 1 : 20) ஆனால், உண்மையாக நான் தேவனை விசுவாசித்தால், ஏதாவது ஒரு வழியில் அவருடன் இணைய வேண்டும். தேவன் இருக்கிறார் என்றும் சகலவற்றையும் படைத்தவர் அவரே என்றும் உண்மையிலேயே விசுவாசிக்கும் ஒருவன், அவரைப் பிரியப்படுத்தும் முயற்சியை எவ்வாறு தவிர்க்க இயலும்? நமது அன்பிற்கும் வணக்கத்திற்கும் தேவனைவிட அதிக தகுதி பெற்ற நபர் யார்? "காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்". (பிரசங்கி 12 : 13 -14) ஆகையால், நித்தியத்தில் அவர் முன்பு நான் வெற்றியுடன் நிற்க வேண்டுமானால், தேவனுக்கு மிகவும் பிரியமுள்ளவனாக இங்கு வாழவேண்டியவனாக இருக்கிறேன்.

தேவன் மனிதனை படைத்தது மட்டுமின்றி அவனை தொடர்ந்து தாங்கிக் கொண்டுமிருக்கிறார். நம்மை சரீரப்பிரகாரமாக மாத்திரம் இல்லாமல் ஆவிக்குரிய வகையிலும் நம்மை தாங்கி வருகிறார். ஆவிக்குரிய மனிதன் நித்தியத்திற்கும் வாழ்கிறான் என்பதால்,

மனிதனுடைய சரீரப்பகுதியைவிட அவனுடைய ஆவிக்குரிய பகுதி அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதை தேவன் ஒப்புக் கொள்ளுகிறார். மனிதன் பேரிலுள்ள இத்தகைய அன்பால், அவனுடைய ஆத்துமாவின் நித்திய இரட்சிப்புக்காக தேவன் வழி செய்துள்ளார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3 : 16) நமது அன்பான தேவன் நமது இரட்சிப்புக்கு வகை செய்துள்ளார். ஆனால் அந்த இரட்சிப்பை நாம் பெற்றுக்கொள்ள சில காரியங்கள் செய்தாக வேண்டும். நாம் ஒரு மிருகத்திற்கு குடிக்க தண்ணீர் கொடுக்கிறோம்; என்றாலும் அந்த தண்ணீரால் பயன்பெற அம்மிருகம் விரும்பினால், அது அந்த தண்ணீரை பருக வேண்டும். நான் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நானும் ஏதாவது செய்தாக வேண்டும். அதாவது என் முழு மனதோடும் ஒரே தேவனை விசுவாசிக்கவும் அன்பு செலுத்தவும் வேண்டும். அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை என்னுடைய இரட்சகராக இங்கு அனுப்பியிருக்கிறார் என்றும் நான் விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசத்தை அறிக்கையிடவும், பிறருக்கு அவரைப்பற்றி தெரிவிக்கவும் நான் விரும்ப வேண்டும். அத்தோடு, நான் மனந்திரும்ப அல்லது எனது பழைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள விருப்பமுள்ளவனாக இருக்க வேண்டும். நான் மறுபடியும் பிறக்க வேண்டும். (யோ 3 : 3 - 5) என்னுடைய சகல பாவங்களின் மன்னிப்புக்கென்று, நான் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக, ஒரே தேவனின் ஒரு பிள்ளையாக நான் மாறி அவரோடு நித்தியத்திற்கும் வாழும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வேன்.

உங்களுக்கு எதுவும் செய்யாத அல்லது செய்ய இயலாத ஜீவனற்ற ஒரு விக்கிரகத்தை ஆராதித்து உங்கள் வாழ்க்கையை வீணாக்குகிறீர்களா? ஜீவனுள்ள ஒரே உண்மை தேவனுக்காக வாழ்ந்து, அவருக்கு ஏன் ஊழியஞ் செய்யக்கூடாது? அவர் விரும்புவது போல, அவரோடு நித்தியத்தில் வாழ நீங்களும் விரும்பி, ஏன் அத்தகைய வாழ்க்கையை இங்கு வாழக்கூடாது?

**Ronnie Lowe** **ரோன்னி லோவ்**

## "என் கிருபை உனக்குப் போதும்"

"அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாபடிக்கு, அது என்னைக்குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர், என் கிருபை எனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாய் இருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்". (2 கொரி 12 : 7 -10)

அப்போஸ்தலன் பவுல் சில தனிப்பட்ட தேவ சலுகைகளை அனுபவித்திருந்தான். அதற்காக அவன் தவறாக பெருமை அடைந்திருக்கக் கூடும்; ஆனால் கண்டுபிடிக்க இயலாத "மாம்சத்திலே ஒரு முள்" அவனை வேதனைப்படுத்தி, அவனுடைய அகந்தையை அகற்றியது.

வேதனையிலிருந்து விடுதலை பெற பவுல் தொடர்ந்து, மனப்பூர்வமாக ஜெபித்தபோதிலும், அவனுக்குப் பதில் கிடைக்கவில்லை. அவனுடைய வேண்டுகோளை கர்த்தர் நிராகரித்து விட்டு, பதிலுக்கு "என் கிருபை உனக்குப் போதும்" என்பதை அவன் ஏற்றுக் கொள்ளச் செய்தார். பவுல் படித்த பாடமும், நாம் படிக்க வேண்டிய ஒரு பாடமும் என்னவென்றால், ". . . . நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" என்பதாகும். (பிலிப். 4 : 11)

தேவனுடைய சித்தத்திற்கேற்ற, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் எல்லா ஜெபங்களையும் அவர் கேட்கிறார் என்பதை அவருடைய வாக்குத்தத்தத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். (1 யோ 5 : 14 -15) இப்படிப்பட்ட எல்லா ஜெபங்களையும் தேவன் கேட்கிறார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள முடியும். அவருடைய சித்தத்திற்கு ஏற்றபடி ஜெபம் செய்த பின்னர், நமது ஜெபங்களை தேவன் கேட்டிருக்கிறார். பதிலளிப்பார் என்பதில் சந்தேகப்படக்கூடாது (யா 1 : 6) அதன் பின்னர் நடக்கும் காரியங்களில் (ரோமர் 8 : 28 பார்க்க) தேவனின் பதிலும் அடங்கும். அது உடனடியாகவும் இருக்கலாம்; தாமதமாகவும் இருக்கலாம். அது "ஆம்" என்றோ அல்லது "இல்லை"

என்றோ இருக்கக் கூடும். நாம் எதைக் கேட்டோமோ அல்லது எதிர்பார்த்தோமோ அதிலிருந்து வித்தியாசமாக இருக்கக்கூடும். தேவனின் சித்தத்தின் பிரகாரமான ஜெபத்தைப் பற்றிய பெரிய காரியம் என்ன வென்றால், பதில் வருகிறதா இல்லையா என்று நாம் சோதித்துப் பார்க்கத் தேவையில்லை. (மத் 8 : 5 -13)

வாரத்தின் முதல் நாள் நாம் பங்கு கொள்ளும் கர்த்தரின் பந்தியில் நினைவுகூறுவோம்; "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ள வராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான் களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி 8 : 9).

தேவன் அருளும் கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

**தமிழில் : எஸ்.எஸ்.ராஜன்**

## எருசலேம் தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்ததற்கான காரணங்கள்

1. யூதருக்கும், புற ஜாதியாருக்கும் இருந்த வேறுபாடு நீங்கியது.
2. பரிசுத்த ஆவியானவர் இறங்கி வருகிற தற்காகப் பரலோகத்தின் கதவு திறக்கப் படுகிறது.
3. தேவன் (எருசலேம்) தேவாலயத்தில் தான் வாசம் பண்ணினார் என்ற நம்பிக்கை முற்றுப்பெறுகின்றது.
4. யூதப்பிரமாணம் (மோசேயின் பிரமாணம்) முடிவுக்கு வருகின்றது.

## இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

"இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்" (அப். 2.37)

1. **நற்செய்தியைக் கேளுங்கள்** : - "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" (எபே 1 : 13)

2. **நற்செய்தியை நம்புங்கள்** :- "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; ஏனெனில் விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" - ரோமர் 1 : 16

3. **நற்செய்திக்குக் கீழ்ப்படியுங்கள்** :- "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்"-ரோமர் 6 : 17

4. **தேவனிடத்தில் திரும்புங்கள்** : - "உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்" - அப். 3 : 19.

"தேவனுக்கேற்ற துக்கம் . . . . . . . இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது". - 2 கொரி 7 : 10

5. **கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிடுங்கள்** :- ". . . . கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" ரோ.10 : 9

6. **கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுங்கள்** :- "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" - அப். 22 : 16."ஞானஸ்நானம்" இப்பொழுது நம்மையும் . . . . இரட்சிக்கிறது" - 1 பேதுரு 3 : 21.

7. **கிறிஸ்துவில் உறுதியாய்த் தரித்திருங்கள்** :- "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்"- அப். 2:42.". . . . விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவை நோக்கி . . . நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு . . . அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்"-

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்.**

## மரணத்திற்குப் பின் நடப்பதென்ன?

மரணத்தின் பின்னர் நடப்பவை பற்றி தேவன் நமக்கு வெளிப்படுத்தியவைகளைவிட அதிகமாகத் தெரிந்து கொள்ள நாம் ஆவலுள்ளவர்களாக இருக்கக் கூடும் (உபா. 29 : 29 பார்க்க) என்றாலும், மரணத்திற்குப் பின் சம்பவிப்பது என்ன என்பது குறித்து அநேக முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறார்.

ஒரு மனிதன் சரீரத்திலிருந்து ஆவி பிரியும் போது மரணம் சம்பவிக்கிறது. (யாக். 2 : 26) நாம் பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்டோம். ஒருவன் மரிக்கும்போது,"மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது" (பிர 12 : 7) ஒவ்வொரு மனிதன் / மனுஷியுடைய ஆவியும் தேவனுடைய கரங்களுக்குத் திரும்புகிறது. அதன்பின் அந்த ஆவியை தேவன் என்ன செய்கிறார்?

### நியாயவானுடைய ஆவி ஒரு சுகமான காத்திருப்பு ஸ்தலத்திற்குச் செல்லுகிறது.

மரித்துப்போன லாசரு என்னும் ஒரு தரித்திரனைப் பற்றி இயேசு கூறினார். "தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். " (லூக். 16 : 22) வேறு விதமாகச் சொன்னால், ஆபிரகாமோடு நட்புறவில் மகிழும் வாய்ப்பைப் பெற்ற ஒரு இடத்திற்கு அவன் சென்றான். " இன்றைக்கு என்னுடனே கூட பரதீசிலிருப்பாய்" (லூக்கா 23 : 43) என இயேசுவின் அருகில் சிலுவையில் தொங்கி, மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த குற்றவாளிக்கு அவர் வாக்களித்தார்."பரதீசு" என்ற பதத்திற்கு "மகத்தான பூங்கா" அல்லது "தோட்டம்" எனப் பொருள். மரணத்திற்குப்பின், இரட்சிக்கப்பட்ட மக்களின் ஆத்துமாக்கள் ஒரு இனிமையான இடத்திற்குச் செல்லுகின்றன என்பதை மேற்குறிப்பிட்ட இரு வசனங்களும் நமக்குப் போதிக்கின்றன. பரதீசு இரட்சிக்கப்பட்டவர்களின் அருமையான ஒரு காத்திருப்பு ஸ்தலம் என்றாலும் அதுவே இரட்சிக்கப்பட்டோரின் இறுதி வாசஸ்தலம் அல்ல.

### பாவியின் ஆவிஒரு வேதனை நிறைந்த காத்திருப்பு ஸ்தலத்துக்குச் செல்லுகிறது :

லாசருவின் கதையிலே இயேசு கூறினார். "ஐசுவரியாவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைபடுகிறபோது தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்". லூக். 16 : 22 - 23. அந்த வேதனையான் இடத்தைவிட்டு அந்த ஐசுவரியவான் வெளியேறவும் முடியவில்லை. பூமியிலே இன்னும் வாழ்ந்து

கொண்டிருந்த அவனுடைய ஐந்து சகோதரர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்கவும் இயலவில்லை. (லூக். 16 : 26 - 31) தீர்ப்புக்காக, சிறையில் குற்றவாளிகள் காத்திருப்பது போல, நியாந்தீர்க்கும் நாள் வரை தற்காலிக தண்டனை அளிக்கும் ஒரு இடத்தில் மரித்துப்போன பாவிகள் வைக்கப்படுகின்றனர். சில தூதர்களும் இத்தகைய தண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். "பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்தார்". (2 பேதுரு 2 : 4) பாதாளத்திலே தண்டனை பெறும் இடம் வேதனை மிகுந்த ஒரு காத்திருப்பு ஸ்தலமாகும். (லூக் 16 : 23) என்றாலும் பாவிகளின் இறுதியான வாசஸ்தலம் அது அல்ல. (வெளி 20 : 13 -14)

எல்லா மக்களும் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு, இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக நியாயத்தீர்ப்பிலே நிற்பார்கள். ". . . . . பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும் படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (யோவான்: 5 : 28, 29) நியாயத்தீர்ப்பு நாளிலே, ஒவ்வொரு நூற்றாண்டிலுமுள்ள, ஒவ்வொரு தேசத்தைச் சார்ந்த, ஒவ்வொரு மனிதனும் இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக நியாயந்தீர்க்கப்பட நிற்பான். (மத் 25 : 31 - 33; வெளி. 20 : 12 -13, அப். 17 : 30 - 31,ரோ 14 : 10)

## நித்திய தண்டனை அல்லது நித்திய வாழ்வுக்கு ஒவ்வொரு மனிதனும் செல்லுகிறான்

" . . . . . . . சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" ( மத். 25 : 41) என பாவிகளை நோக்கி இயேசு கூறுவார். பாவிகள் அவர்களுடைய இறுதி ஸ்தலமாகிய அக்கினிக் கடலிலே அல்லது நரகத்திலே தள்ளப்படுவார்கள். (வெளி 20 : 14, 21 : 8, மாற். 9 : 43 -44) ஆனால் நியாயவான்களை நோக்கி, ". . . . வாருங்கள் என் பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் " (மத் 25 : 34) என இயேசு கூறுவார், இரட்சிக்கப்பட்டவர்கள் தங்களுடைய இறுதி ஸ்தலமாகிய புதிய பூமியில் புதிய ஜெருசலேமில் நித்திய வாழ்வை அனுபவிக்கச் செல்வர், (2 பேது 3 : 13 வெளி 21 & 22) கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய தாமதிப்பது மூடச்செயல். வாழ்க்கை மிகவும் குறுகியதாகவும் நிச்சயமற்றதாகவும் இருக்கிறது. (யாக் 4 : 13 -14) நித்தியம் அதிக நீளமும் நிச்சயமுள்ளதாகவும் இருக்கிறது. எனவே, கிறிஸ்துவுக்காக இப்போது வாழுங்கள், அவரோடு எப்போதும் வாழலாம்.

**Royee Fredrick**

# தேவ ஞானம்; மனித ஞானம்

உலக ஞானம் தேவனுக்குப் பைத்தியமானது என்று கொரிந்தியருக்கு அப்போஸ் தலனாகிய பவுல் எழுதுவதற்கு முன்பே தேவனுடைய சிந்தனைகள், மனிதனுடைய சிந்தனைகள் அல்ல, தேவனுடைய வழிகள் மனிதனுடைய வழிகள் அல்ல. (ஏசாயா 55 : 8) என்று எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய சிந்தனைகளும், வழிகளும் பிழையில்லாமல் இருக்கின்ற அதே நேரத்தில், மனிதனின் சிந்தனைகளும், வழிகளும் பிழையுள்ளதாகவும், பலவீனமான தாகவும் இருக்கின்றன. மனிதனின் பிழைகளை தேவனின் ஞானம் கண்டிக்கின்றன. ஏனென்றால் தேவன் பொய் சொல்லமாட்டார் (தீத்து 1 : 3) தேவனுடைய ஞானத்தோடு மனித ஞானம் மோதும் போது தேவனே உண்மையுள்ளவராக இருக்கிறார். மனிதன் பொய்யுடையவனாக இருக்கிறான். (ரோமர் 3 : 4)

கிறிஸ்துவிலே, தேவனுடைய வெளிப்பாட்டிற்கு வெளியே தன்னுடைய ஆத்துமாவை வழிநடத்துவதற்கு மனிதன் தன்னுடைய முயற்சியை நம்பியிருப்பது முட்டாள் தனம் என்று வேதாகமத்தில் அநேக வசனப் பகுதியில் படிக்கிறோம். உதாரணமாக (1 கொரி 1 : 18 : 2 : 5)ல் படிக்கலாம். ஆகையால் சிலுவையின் உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாக இருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய் பவுல் கொரிந்தியர் புத்தகத்தில் கூறுகிறார். (1 கொரி 1 : 18) தேவனுடைய ஞானத்தைப் புறம்பே தள்ளி வைத்துவிட்டு, தங்களுடைய முயற்சியிலும், ஞானத்திலும் நம்பிக்கை வைத்திருக்கும் இவ்வுலகத்தின் தத்துவஞானிகள் தங்களுடைய முயற்சிகளிலே தோல்வியே தழுவிக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகத்தின் சரித்திரத்திலே ஒரு காலத்து தத்துவம் மற்றொரு காலத்துக்கு பொருந்தா வண்ணம் இருக்கின்றது. அநேகந்தரம் கிறிஸ்தவர்களே அப்படிப்பட்ட உலக ஞானத்தின் அடிமைக் குள்ளாகி விடுகிறார்கள். உதாரணமாக கலா 3 : 1 - 3ல் நாம் இப்படியாகப் படிக்கிறோம். புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்?

இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே . . . . ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரோ?

இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்காவிட்டால், யாரும் அவருடைய தன்மையைப் பற்றி பேசியிருக்க முடியாது. மாம்சத்தினாலான அவருடைய உயிர்ப்பு அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் வல்லமையாக இல்லாதிருந்தால், அதைப் பற்றி யாரும் அதிகமாக கற்றறிந்திருக்க மாட்டார்கள். சபையானது

ஸ்தாபிக்கப்படாமலிருந்திருந்தால் யாரும் நித்திய வாசஸ்தலத்தைப் பற்றி அதிகம் சிந்தித்திருக் கமாட்டார்கள். புதிய ஏற்பாடு எழுதப்படாமலிருந்தால் யாரும் அதைக் கட்டுக்கதை என்று வருணிக்காமல் இருந்திருப் பார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு பரலோகம் என்கிற நம்பிக்கை இல்லா திருந்தால், யாரும் மற்றவருக்கு நித்திய வாழ்க்கையைப் பற்றி பேசியிருக்க மாட்டார்கள். நிச்சய மாகவே கிறிஸ்துவ விசுவாச கோட்பாடுகளை குற்றப்படுத்த நினைக்கும் அனைத்து மனித ஞானமும் சக்தியும் பலமற்றுப் போய்விட்டன.

ஒரு கேள்வி கேட்கப் பட்டது ...... "இந்த உலகத்திற்கு தம்முடைய பணியை நிறைவேற்ற வந்த இயேசு கிறிஸ்துவை ஏன் மனிதர்கள் வெறுத்தார்கள்?" இந்தக் கேள்விக்கு இயேசுவைத் தவிர வேறு யாராலும் பதிலளிக்க முடியவில்லை. ஒளியானது உலக த்திலே வந்திருந்தும் மனுஷ ருடைய கிரியைகள் பொல்லா தவைகளாயிருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரண மாயிருக்கிறது. (யோ 3 : 19) இயேசுவின் சிலுவையே, தேவ ஞானத்திற்கும் மனித ஞானத் திற்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சனைக்கு நினைவுச் சின்னமாக இருக் கின்றது. மனித ஞானத்திற்காக தேவஞானத்தை புறம்பே தள்ளி விடுவதற்கு ஏதாவது காரணம் ஒன்று இருக்கின்றதா? மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறு புதிய சிந்தனைகளும், புதிய கொள்கைகளும் மக்களிடத்திலே வளர வேண்டும் என்று உலகத்தில் பேசப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட விவாதம் பழைய மரபுகளை சேராமலா கடைப் படிக்கப்படுகின்றது. காலங்கள் மாறுகின்ற காரணத்தினால் சத்தியம் பொய்யாக மாற முடியுமா, பொய் சத்தியமாக முடியுமா? கிறிஸ்துவ விசு வாசத்தின் உண்மைகளை ஒருவர் விட்டுவிடவேண்டுமென்று ஏன் மாறுகின்ற காலங்கள் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்? கிறிஸ்துவ விசுவாசத்தின் உண் மைகள் சரித்திரத்தை அடிப் படையாக கொண்டுள்ளன. மேலும் அவை மாறக் கூடிய காரியங்களாக இல்லாமல், சரித்திர நிகழ்ச்சிகளை அடிப்படை யாகவே கொண்டுள்ளன.

மனிதனின் மாறக்கூடிய நிலையோடும் மனிதனின் வழிமுறைகளோடும், தேவஞானம் தொடர்பு கொள்ள முடியாது. ஆகவே, தேவ ஞானத்தை புறம்பே தள்ளுபவர்கள் முழுமை யாக மனித ஞானத்திற்கு அடிமை யாகிவிடுகிறார்கள். மனித ஞானத்தைப் பற்றி பவுல் பேசும் போது அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத் தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரா னார்கள் உணர்வில்லாத அவர் களுடைய இருதயம் இருள டைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி என்று கூறுகிறார். (ரோமர் 1:21-22) இந்தக் காரணத்திற்காக மனி தனின் மாயமான சிந்தனை வலைகளில் கிறிஸ்தவர்கள் சிக்கிக் கொள்ளக் கூடாதென்று பவுல் அப்போஸ்தலர் அவர் களை எச்சரிக்கிறார். (கொலை 2 : 8 ; 1 தீமோ 6 :20, யாக் 4 : 4) அந்த எச்சரிப்பு நமக்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது. ஏற்று நடப்போம்.

**தமிழில் : பேங்க்ரஸ்**
**ஈரோடு.**

# புறங்கூற வேண்டாம்!

"என்னிமித்தும் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே ... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்". (மத் 5 : 11, 12, 44)

**ஒருபோதும் பிறரை குறை கூறாதே :-**

குறை கூறல் சாத்தானின் ஆயுதம் (வெளி 12 : 10) அது ஆப்த நண்பர்களைப் பிரிக்கிறது (நீதி 16 : 28, 17 : 9) தேவ கோபத்தை உண்டாக்குகிறது. (நீதி 6 : 19) வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளிலும் இது பாவச் செயல் என அடையாளங் காட்டப்படுகின்றது. (யாத் 23 : 1, லேவி 19 : 16, சங்க. 101 : 5, ரோமர் 1 : 29 - 30,யாக் . 4 : 11, 5 : 9, 1 பேதுரு 2 : 1) குற்றஞ்சுமத்துவதைத் தவிர்க்க வேண்டும். (எபே. 4 : 31) "ஒருவனையும் தூஷியாதே" (தீத்து 3 : 2) நமது வார்த்தைகள் யாவற்றுக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (மத் : 12 : 36) அவசர முடிவுகளைத் தவிர்ப்போம்; நாம் நிச்சயமாக அறியாதவற்றை கூறமாட்டோம்.

**நமது நாவை அடக்கி வைப்போம் :-**

ஒரு காரியத்தைப் பற்றி பேசுவதற்கு முன், "இது உண்மையா? " "இது உத்தமா?" "இது தேவையா?" என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோம். "என்னைப் பற்றி பிறர் இவ்வாறு பேசுவதை நான் விரும்புவேனா?" என்ற பொன்னான விதியை நாம் பேசும் எல்லாவற்றிலும் கடைப்பிடிப்போம். "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள், இதுவே நியாப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்". (மத் 7 : 12) நமது சகோதரன் நமக்கு விரோதமாய் பாவஞ்செய்தால், முதலில் அவனோடு தனித்துப் பேசுவோம் - அவனை இரட்சிப்பதற்காக அவனை வெட்கப் படுத்த அல்ல (மத் 18 : 15 - 17)

**புறங் கூறுவதை கேட்க வேண்டாம் :-**

பசியுள்ள காதுகளைத் தேடி கேடான கதைகள் வரும். "விறகில்லாமல் நெருப்பு அவியும்; கோள் சொல்லுகிறவன் இல்லாமல் சண்டை அடங்கும்". (நீதி 26 : 20) நமது காதுகளையும் நாவையும் வதந்திகளைப் பரப்ப ஒரு கோள் மூட்டி

உபயோகிக்க நாம் அனுமதிக்கலாகாது : "மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே" மாறாக "உன்னை சுத்தவானாகக் காத்துக் கொள்" (1 தீமோ 5 : 22) அன்பு சகோதரர்களுக்காகப் பரிந்து பேசும், அவர்களுடைய நடத்தை பற்றிய நல்லவைகளை மட்டும் நம்புகிறது. (1 கொரி 13 : 4 - 7) "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்புதிரளான பாவங்களை மூடும்". (1 பேதுரு 4 : 8)

**தூஷணைக்குத் துவண்டு போகாதீர் : -**

நாம் சரியானவற்றைச் செய்ய முயன்று கொண்டிருந்தால் இவ்வுலகம் நம்மை வித்தியாசமாகப் பார்ப்பதுடன், நம்மைப் பற்றி புறங்கூறும் (1 பேதுரு 4 : 4, யாக். 15 : 18-20 ; 2 தீமோ 3 : 12) உங்களை யாராவது தூஷித்தால், நீங்கள் யோபு (யோபு 1 : 9 - 11, 4 : 3) யோசேப்பு (ஆதி 39 : 14 -18) மோசே । நாளா 16 : 3, 13) நாபோத் (1 இரா. ‹21 : 9 - 14 எரேமியா (எரே 18 : 18) இயேசு (யாக். 5 : 18, 8 : 48, 52, 10 : 20; மத். 11 : 19; 12 : 24, 26 : 59 -61 மாற். 14 : 55 - 59, 64) ஸதேவான் (அப் 6 : 11, 13) பவுல் (ரோ 3 : 8, 2 கொரி 6 : 8) ஆகியோரின் நல்ல துணையுடன் இருப்பதை உணருங்கள்.

**தூஷிப்போரை நேசிப்போம் : -**

அவர்களுக்காக ஜெபிப்போம், அவர்களுக்கு நல்லதைச் செய்வோம்; அவர்களை மன்னிப்போம். (மத் 5 : 44; 6 : 12 - 15, ரோ 12 : 14, 17 :21, 1 கொரி 4 : 12 - 13) அவர்களுக்கும் ஆத்மா உண்டே, தவறான குற்றச்சாட்டுகளை நாம் கர்த்தருக்காகத் தாங்கிக் கொண்டால் மோட்சத்தில் ஒரு பெரிய பரிசு நமக்காகக் காத்திருக்கிறது என்பதை நினைவு கூறுங்கள். (மத் 5 : 11 - 12, 1 பேதுரு 4 : 14)

**நாம் நேர்மையாக வாழ்வோம்: -**

அப்போது நம்மைப் பற்றிய குற்றச்சாட்டுகளை பிறர் நம்பமாட்டார்கள். நாம் ". . . . விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்கமலிருக்க வேண்டும்" ( 1 தீமோ 5 : 14) "கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரர் என்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல் மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள்". (1 பேதுரு 3 : 16) "புற ஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தும் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்". (1 பேதுரு 2 : 12).

***ராய்ஸ் ப்ரெட்ரிக்***

**Royce Fredrick**

## வேதாகமம் கூறுகிற ஒன்றுகள்

"ஒரே வழிதான்", "இது தான் சத்தியம்" என்று சொல்வோமானால் மக்களுக்கு எவ்வளவு எரிச்சல் உண்டாகிறது என்று அறியும்போது நமக்கு உண்டாகும் மனவேதனை கொஞ்ச நஞ்சமன்று. மாறாக, "வழிகள் வித்தியாசமாக இருந்தாலும், நல்லவர்கள் எல்லாம் மோட்சம் போவார்கள்" நீங்கள் நம்புகிற காரியங்களில் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் அவைகளை வரவேற்கிறார்கள்'ஆரோக்கியமான உபதேசம் ஒன்று தான். மற்றவைகள் எல்லாமே ஏதோ ஒரு விதத்தில் தவறுடையது என்று சொல்லவோமானால் வருகிற எதிர்ப்பைச் சமாளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

தூய கிறிஸ்தவத்தை வைராக்கியமாகப் போதிப்பதனால் ஏற்படும் ஆபத்தை ஸ்தேவான் சீக்கிரமாகவே கண்டு கொண்டார் அந்நாட்களில் மதத்தின் மகுடாதிபதிகள் என்று எண்ணப்பட்ட யூதத் தலைவர்களிடம் உங்கள் நம்பிக்கை தவறானது என்று கூறி இயேசுக் கிறிஸ்துவே நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியா, அவரை நீங்கள் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் என்று சொன்னதற்காக அவன் இன்னுயிரைக் கொடுக்க வேண்டியதாயிருந்தது. (அப் 7 : 59). இயேசுக் கிறிஸ்துவில் மட்டுமே இரட்சிப்பு உண்டென்று சொன்னதற்காக அப்போஸ்தலன் பேதுரு சிறையில் அடைக்கப்பட்டார். (அப் 4 : 12)

தேவன் ஒருவரே என்று வேதாகமம் கூறுகிறது. (எபே 4 : 6) என்று கூறுவோமானால், மற்ற மதத்தினர் இதை ஜீரணிக்க முடியாமல் நெளிகிறார்கள். ஆனால் நாம் சிருஷ்டிகராகிய அவருக்குக் கணக்கு கொடுத்தேயாக வேண்டும் என்று வேதம் விளிம்புகிறது. (வெளி 20 : 12) தேவன் ஒரே ஒரு மார்க்கத்தைத் தான் அங்கீகரிக்கிறார் என்று நாம் சொல்வோமானால் மற்றவர்கள் நம்மை கேலி செய்வார்கள். அதே போல உண்மையான சபை ஒன்று தான் என்றாலும் நம்மை பரிகாசிப்பார்கள். அதனால் எல்லாம் உண்மை மாறுவதில்லை அதே போல "ஒரே சரீரம்" என்று வேதாகமம் போதிக்கிரது. (எபே 4 : 4) அந்த ஒரே சரீரமாகிய சபைக்கு இயேசு கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். (கொலோ 1 : 18).

இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி தான் உண்டு. அதை ஒரே விசுவாசம் என்று வேதாகமம் கூறுகிறது (எபே 4 : 5) அந்த ஒரே விசுவாசத்துக்குக் கீழ்ப்படிவது இரட்சிப்பின் மகிழ்ச்சியைத் தரும். இரட்சிப்பு உண்டாவதற்கு, தன் செய்கைகளுக்குப் பொறுப்பேற்கும் வயதுள்ள ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். (மாற்கு 16 : 16) தங்கள் பாவங்களுக்காக மெய்

மனஸ்தாபப்பட்டு மனம் திரும்ப வேண்டும். (அப் 2 : 38) இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும். (ரோமர் 10 : 9) தங்கள் பாவங்கள் கழுவப்பட கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும். (அப் 2 : 38). நாம் யாவருமே பாவிகளாக இருக்கிறபடியால் இந்த இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் வாழ்வடைய முடியாது. **தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைத் தரும்படிக்கும் இயேசு கிறிஸ்து** வருவார். (2 தெச 1:7,8) தப்பித்துக்கொள்ள எவ்வித வழியும் கிடையாது. (2 தெச.1:7,8)

அதே போல அந்த ஒரே சபையில் ஆராதிப்பது எப்படி என்பதைக் கூட வேதாகமம் கூறியிருக்கிறது. ஆனால் மனிதர்கள் தங்களுக்குத் தோன்றியபடி அதற்குப்பல மாற்று முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவைகளை வேத வசனம் கண்டிக்கிறது. (மத் 15 : 9) ஆனால் புதிய ஏற்பாடு "**ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்** என்று தெரிய வாய்ப் போதிக்கிறது. (யோவான் 4 : 23) அதை விட்டு விலகும் போது நம்முடைய ஆராதனை பொருளற்றது. வீண் நாம் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரம் **இல்லாமல் அதன்படி** செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். (யாக் 1 : 25 மத் 7 : 21-23).

**உங்களுக்குண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும், ஒரே திருமுழுக்கும், எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார் மேலும் எல்லோரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்.** (எபே 4:4-6) என்பதை சிந்தித்து உங்கள் நிலையை உறுதி செய்து கொண்டு வாழ்ந்து இதையே போதியுங்கள்.

**வில்ட்டர் ஸ்வெயின்**

## கவலையை விடுங்கள்

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."

**பிலிப். 4 : 6**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted at Erode HPO on 20, July 1994
JULY 1994, THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20 MM, ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

வேண்டுவோர் தொடர்பு கொள்க

**E.Z.S. ராஜநாயகம்**

கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு,
காங்கயம் 638 701

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701